# குழித்துறை நகராட்சி

## குழித்துறை நகர்மன்றத்தின் 30-07-2019 செவ்வாய் கிழமை நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மன்றப்பொருள் மற்றும் தீர்மானங்கள்

பொருள் எண்.1

குழித்துறை நகராட்சியால் நடத்தப்படும் 94-வது வாவுபலி பொருட்காட்சியில் கபடி போட்டிகள் நடத்தவும், போட்டிகள் நடத்துவதற்கு தேவையான பொருட்கள் வாங்கி வழங்கிட சுகாதார ஆய்வாளர் அறிக்கை செய்துள்ளதாலும் மற்றும் கைவினை பொருட்கள் விவசாயப்பொருட்கள் ஆகிய இனங்களுக்கு சிறப்பு பரிசுகள் வாங்கிட ஆக மொத்தம் உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3309**
**அனுமதிக்கப்படுகிறது**.

பொருள் எண்.2

குழித்துறை நகராட்சி பகுதியில் தினமும் சேகரமாகும் குப்பைகள் கீழ்பம்மம் உரக்கிடங்கில் கொட்டப்பட்டு வருகிறது. குப்பைகளை காட்டுவதற்கு போதிய இடவசதி இல்லாததால் Compost Yard முழுவதும் குப்பைகள் நிறைந்து மீண்டும் குப்பைகளை கொட்ட முடியாமலுள்ளது. கொட்டப்பட்டுள்ள குப்பைகள் மேல் லாறியை ஏற்ற முடியாத நிலையிலுள்ளது. எனவே மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி JCB இயந்திரம் மூலம் குப்பைகளை பழைய குப்பைகளின் மேல் ஒதுக்கி வைப்பதற்கு ரூ.80,000/-ற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்வதற்கும், அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3310**
**அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்.3

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலைய சுத்திகரிப்பு நிலையம் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் குளோரினேசன் செய்திட பிளீச்சிங்பவுடர் பயன்படுத்தப்பட்டு வருகிறது. சப்பாத்து நீரேற்று நிலையம் மற்றும் இடக்குளம் நீரேற்று நிலையத்திலிருந்து நீரேற்றப்பட்டு வரும் மேல்நிலைத் தொட்டிகள் சுத்தம் செய்யவும் குளோரினேசன் செய்யவும் பிளீச்சிங் பவுடர் பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே 2500 கிலோகிராம் பிளீச்சிங் பவுடர் வாங்கி இருப்பில் வைத்து பயன்படுத்துவதற்கு மதிப்பீடு ரூ.1,13,000/-ற்கு தயார்

செய்யப்பட்டுள்ளது. மேற்படி பிளீச்சிங் பவுடர் வாங்குவதற்கும் அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>நகர்மன்றத் தீர்மானம் எண்.3311</u>**

**அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்.4</u>

குழித்துறை நகராட்சியின் தலைமை நீரேற்று நிலைய சுத்திகரிப்பு நிலையத்தில் குடிநீர் சுத்திகரிக்கும் பணிக்கு ஆலம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே ஆலம் 5000 கிலோ வாங்கி இருப்பில் வைத்து பயன்படுத்துவதற்கு மதிப்பீடு ரூ.95,000/-ற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆலம் வாங்குவதற்கும் அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>நகர்மன்றத் தீர்மானம் எண்.3312</u>**

**அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்.5</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதார பிரிவு வாகனம் TN.751813–ற்கு 2019–2020–ம் ஆண்டிற்கு தகுதி சான்று பெறுவதற்கு வாகனத்திலுள்ள பழுதுகள் நீக்கம் செய்வதற்கு ஹரிபாலகிருஷ்ணா ஆட்டோ மொபைல்ஸ் நிறுவனம் மூலம் ரூ.56,438/-ற்கு விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது. மேற்படி வாகனத்தின் பழுதுகளை அரசு அங்கீகாரம் பெற்ற ஹரிபாலகிருஷ்ணா ஆட்டோ மொபைல்ஸ் நிறுவனம் மூலம் பழுது நீக்கம் செய்யவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>நகர்மன்றத் தீர்மானம் எண்.3313</u>**

**அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்.6</u>

குழித்துறை நகரம் புல எண். D3/47 நிலவியல் பாதை தொடர்பாக திருமதி.பி. ஜாஸ்பென் எபனோ மார்த்தாண்டம் என்பவர் நகராட்சி ஆணையர் மற்றும் 6 பேர் மீது சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் WP(MD)No.11565 of 2018–ன்படி வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பில், திரு. ஆதிமூலபாண்டியன் வழக்காடியமைக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.10,000/- கேட்டுள்ளார். எனவே மேற்படி தொகையினை நகராட்சிப் பொதுநிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
F.No.1448/2018/TPI.

**<u>நகர்மன்றத் தீர்மானம் எண்.3314</u>**

**அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்.7

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், அரசு ஆணைப்படி, அனைத்து கட்டிடங்களிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்த வேண்டி, விழிப்புணர்வு ஏற்படுத்தவும், அறிவிப்புகள் வழங்கவும், இத்திட்டத்தினை விரைவாக செயல்படுத்த வேண்டியும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.15415/2013/குவ1, நாள் 12-07-2019-த்தில் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. எனவே நகராட்சியில் இத்திட்டத்தினை விரைந்து செயல்படுத்த வேண்டி ஏற்படுகிற செலவினங்கள் செய்ய உத்தேச செலவு ரூ.25,000/- ஆகும். எனவே மேற்படி செலவு தொகை ரூ.25,000/- மட்டும் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

P.No.1298/2019/TPI

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3315**

**அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்.8

குழித்துறை நகராட்சிப்பகுதியில் கீழ்காணும் திட்டப்பணிகள் மேற்கொள்ள 9-7-2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூபாய் லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | குழித்துறை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் குடிநீர் விநியோக குழாய்கள் மற்றும் பிரதான குழாய்கள் Sluice வால்வுகள் Air வால்வுகளில் ஏற்படும் பழுதுகளை 2019-2020-ம் ஆண்டிற்கு வருடாந்திர பராமரிப்பு மேற்கொள்ளுதல் | 7.00 | 1) P.ஜெயச்சந்திரன்<br>2) P.ஜெயப்பிரகாஷ் | மதிப்பிட்டை விட 0.07% குறைவு<br>மதிப்பிட்டை விட 1.15% அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | குழித்துறை நகராட்சிக்குட்பட்ட உரக்கிடங்கில் தீவிபத்து ஏற்பட்டால் உடனடியாக தீயை அணைக்கும் விதத்தில் செயல்பட புதிய ஆழ்துளை கிணறு அமைத்து Fire Lose பொருத்தும் பணி செய்தல் | 4.00 | 1) C.சுரேஷ்<br><br>2) D.ஜஸ்டின்குமார் | மதிப்பிட்டை விட 0.10% குறைவு<br>மதிப்பிட்டை விட 0.61% அதிகம் |
| 3 | குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் சந்தையினுள் புதிய கடை எண்.2, 8, 15 ஆகியவற்றிற்கு மின் வசதி செய்யும் பணி செய்தல் | 1.00 | 1) S..பாபு<br><br>2) V.பாலகிருஷ்ணன் | மதிப்பிட்டை விட 0.07% குறைவு<br>மதிப்பிட்டை விட 0.58% அதிகம் |
| 4 | குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் மீன்சந்தை, லாரிப்பேட்டை மற்றும் பேருந்து நிலையத்தில் கண்காணிப்பு கேமரா பொருத்தும் பணி செய்தல் | 3.80 | 1) M/s. Rapid Refills<br><br>2) M/S. Kenith Computers | மதிப்பிட்டை விட 0.02% குறைவு<br>மதிப்பிட்டை விட 2.67% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 முதல் 4 வரை மதிப்பீட்டை விட குறைவான விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>நகர்மன்றத் தீர்மானம் எண்.3316</u>**

**அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்.9</u>

குழித்துறை நகராட்சியால் நடத்தப்படும் 94-வது வாவுபலி பொருட்காட்சியில் பொது சுகாதாரம் பாதுகாத்திடவும் வாவுபலி திடலில் நடைபெறும் கபடி பேட்டிக்கு தேவையான கீழ்காணும் பொருட்கள் Tamil Nadu Multipurpose Indco Serve, Thrichy என்ற நிறுவனத்திடமிருந்து வாங்கி வழங்க உத்தேச செலவினம் ரூ.5,00,000/-த்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

1) பிளீச்சிங் பவுடர் - 3000 கிலோ
2) நீத்தா சுண்ணாம்புத்துள் – 10000 கிலோ
3) பினாயில் – 750 லிட்டர்

ந.க.எண்.53.2019.அ2.

**<u>நகர்மன்றத் தீர்மானம் எண்.3317</u>**

**அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்.10

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் வாகனம் TN74Z-4605–ற்கு 2019–2020–ம் ஆண்டிற்கான தகுதிச்சான்று பெறுவதற்கு வானத்தின் பழுதுகளை நீக்கம் செய்திட அரசு அங்கீகாரம் பெறப்பட்ட M/S.T.V. Sundaram Iyyangar Sons & Pvt. Ltd.மூலம் ஆய்வு செய்யப்பட்டு ரூ.69,360/–க்கான விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட வாகனத்தின் பழுதுகளை T.V. Sundaram Iyyangar Sons & Private Ltd. மூலம் பழுது நீக்கம் செய்யவும் அதற்கான தொகையினை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.3318**

**அனுமதிக்கப்படுகிறது.**

ஒப்பம்/– திரு.எஸ். மூர்த்தி,
ஆணையாளர் மற்றும்
தனி அலுவலர்,
குழித்துறை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.